### மானாவாரி விவசாயத்தை பாதுகாக்க

# கோடை உழவு மானியம் தராத த.வெ.க. அரசு!

## லட்சக்கணக்கான விவசாயிகள் ஏமாற்றம்!

கோவில்பட்டி, ஜூலை 10-

தமிழகம் முழுவதும் மானாவாரி விவசாயிகள் கோடை உழவு செய்வதற்கு அரசு வழங்கி வந்த மானியம், இந்தாண்டு இதுவரை வழங்கப்படவில்லை. முந்தைய அரசுகள் ஜூன் மாதம் முதல் வாரத்திலேயே வழங்கி வந்த மானிய தொகை இதுவரை வழங்கப்படாததால் மாநிலம் முழுக்க லட்சக்கணக்கான விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர். தமிழ்நாட்டில் சுமார் 56 லட்சத்து 41 ஆயிரம் ஏக்கர் மானாவாரி நிலங்களில் பருவமழையை மட்டுமே ஆதாரமாக கொண்டு பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

மானாவாரி நிலங்களில் சிறுதானியங்கள், பயறு வகைகள், பணப்பயிர்கள், எண்ணெய் வித்துக்கள், மூலிகை வித்துக்கள் போன்ற பல்வேறு வகையான பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. முந்தைய காலங்களில் நிலங்களில் விளைந்த திரட்சியான கதிர்மணிகளை பாதுகாத்து அவற்றையே விதைகளாக பயன்படுத்தினர். வீடுகளில் வளர்க்கப்பட்ட கால்நடைகளின் சாணங்களை உரமாக பயன்படுத்தினர்.

காலப்போக்கில் செயற்கை உரங்களான ரசாயன உரங்களை அடி உரமாகவும், நாட்டு ரக விதைகளுக்கு பதிலாக அதிக விளைச்சலை தரக்கூடிய வீரிய ஒட்டுரக விதைகளையும், கால்நடைகள் வளர்ப்பு குறைந்ததால் டிராக்டர்கள் மூலமும் உழவில் ஈடுபட்டு வருகின்றனர். விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்து, களை பறிப்பு மருந்து, ஊட்டச்சத்து மருந்து என புதிய தொழில்நுட்பங்கள் மூலமே தற்போதும் விவசாயம் செய்யப்படுகிறது.

இதனால் ஏக்கருக்கு கோடை உழவு முதல் பருவ உழவு வரை மற்றும் பயிர் பராமரிப்பு என வரம்பு மீறி செலவுகள் ஏற்படுகிறது. இதை விவசாயிகளால் சமாளிக்க முடியாமல் மானாவாரி நிலங்கள் பல இடங்களில் வீட்டு மனைகளாக மாறி வருகின்றன. இதனை கருத்தில் கொண்டு மானாவாரி விவசாயத்தை மேம்படுத்தும் நோக்கத்தில், நீடித்த மானாவாரி இயக்கம் என்னும் திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்த திட்டத்தின் கீழ், மானாவாரி விவசாய நிலங்களில் கோடை உழவு செய்ய விவசாயிகளுக்கு மானியம் வழங்கும் திட்டம் கடந்த 2021ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. மழையை மட்டுமே நம்பியிருக்கும் மானாவாரி விவசாய நிலத்தில் விவசாயம் செய்து வரும் விவசாயிகளின் வேளாண் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு, அவர்களின் வயல்களை கோடை உழவு செய்ய மானியம் வழங்கி, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதே கோடை உழவு மானியத் திட்டத்தின் நோக்கமாகும்.

மானாவாரி விவசாய நிலத்தில் கோடை உழவு செய்யும் விவசாயிகளுக்கு, ஏக்கர் ஒன்றிற்கு 50 சதவீதம் மானியமாக, ரூ.800 முதல் ரூ.1,250 வரை அரசு சார்பில் வழங்கப்படுகிறது. இந்த தொகை மாவட்டங்களின் தன்மைக்கேற்ப மாறுபடும். இந்த திட்டத்தின் கீழ், ஒரு விவசாயி குறைந்தபட்சமாக ஒரு ஏக்கர் முதல் அதிகபட்சமாக 5 ஏக்கர் வரை உழவு செய்து மானியம் பெற்றுக் கொள்ளலாம். மேலும், சிறு, குறு, ஆதிதிராவிட, பழங்குடி மற்றும் பெண் விவசாயிகளுக்கு மானியம் வழங்குதலில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

இந்த திட்டத்தில் வழங்கப்படும் மானியமானது நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கே செலுத்தப்படுவதால், இடைத்தரகர்கள் யாரும் இல்லாமல் நேரடியாக விவசாயிகளிடமே பணம் சேர்ந்து விடும் என்பதால் ஆண்டுதோறும் லட்சக்கணக்கான விவசாயிகள் இத்திட்டத்தினால் பயன்பெற்று வந்தனர். இடையில் சிறிதுகாலம் இத்திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டு கடல்பாசி உரம், இயற்கை உரம் வழங்கப்பட்டது.

பின்னர் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று கோடை உழவு மானியத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் முதல் வாரத்தில் விவசாயிகள் வங்கிக் கணக்கிற்கு மானியத்தொகையை அரசு விடுவித்து வந்தது. ஆனால் புதிதாக பொறுப்பேற்ற அரசு, ஜூலை மாத முதல் வாரம் முடிந்து விட்ட நிலையிலும் கோடை உழவு செய்ய விவசாயிகளிடம் எவ்வித விண்ணப்பம் பெறவோ, இதுகுறித்த அறிவிப்போ வெளியிடவில்லை.

அதிகாரிகள் முந்தைய அரசு, கோடை கால உழவிற்கு வழங்கிய மானியம் குறித்து முதல்வரிடமோ, துறை அமைச்சரிடமோ எடுத்துக் கூறவில்லை. இதனால் மாநிலம் முழுக்க லட்சக்கணக்கான விவசாயிகள் கோடை உழவு மானியம் கிடைக்காமல் ஏமாற்றமடைந்து உள்ளனர். மேலும் கடந்த காலங்களில் அரசு ஏக்கருக்கு வழங்கிய உழவு மானியத்தை விலைவாசி உயர்வை கணக்கில் கொண்டு உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் விவசாய சங்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.

### “ஆட்சிக் கவிழ்ப்பு” வார்த்தையை திரும்பப் பெற்றனர்! முதல் தகவல் அறிக்கை நீர்த்துப்போனது!

### ‘ஆதாரமில்லாமல் அரசியலுக்காகத் தொடரப்பட்ட வழக்கு’ என்ற வாதத்தை ஏற்று

# செந்தில் பாலாஜிக்கு உயர்நீதிமன்றம் முன்ஜாமீன்!

## கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ பேட்டி!

**சென்னை,ஜூலை 10-**

**முன்னாள் அமைச்சர் வி. செந்தில் பாலாஜிக்கு உயர்நீதிமன்றம் முன் ஜாமீன் வழங்கியது தொடர்பாக கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ அளித்த பேட்டியில் ஆதாரமில்லாமல் அரசியலுக்காக தொடரப்பட்ட வழக்கு என்ற வாதத்தை ஏற்று முன் ஜாமீன் வழங்கியது உயர் நீதிமன்றம் எனவும், திமுக மீது களங்கம் சுமத்துவதற்காகப் பயன்படுத்திய ‘ஆட்சியைக் கவிழ்க்க’ என்ற வார்த்தையை நீக்கி பின் வாங்கிய தவெக அரசு என்றும், தெரிவித்துள்ளார்.**

**இதுகுறித்து என்.ஆர். இளங்கோ அளித்த பேட்டி வருமாறு:**



இன்று மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் செந்தில் பாலாஜி மற்றும் அவருடைய சகோதரர் ஆகியோர்க்கு நிபந்தனையுடன் கூடிய முன் ஜாமீன் வழங்கியிருக்கிறார்கள். ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் இளையராஜா தன்னிடம் ஒரு நபர் “நீங்கள் சட்டமன்றத்தில் சபாநாயகர் மீது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரும்போது அதற்கு எதிர்த்து வாக்களிக்க வேண்டும். உங்க கொறடா என்ன சொன்னாலும் அதை எதிர்த்து வாக்களிக்க வேண்டும்.

அப்படி வாக்களித்தால் உங்களுக்கு நாங்கள் முப்பத்தைந்து கோடி ரூபாய் தருகிறோம்” என்று சொல்லி ஒரு புகார் கொடுக்கப்பட்டது.

**புகாரை உருவாக்கி வழக்குப் பதிவு!**

ஆனால் எங்கள் தரப்பு வாதாடும் போது முன்வைத்தது, 26 ஆம் தேதி ஜூன் மாதம் ஏறக்குறைய இரவு பத்து மணிக்கு அந்த தொலைபேசி அழைப்பு வந்ததாக பெயர் குறிப்பிட்டு இருந்தாங்க. ஆனா இருபத்தி ஒன்பதாம் தேதி வரைக்கும் அந்த சட்டமன்ற உறுப்பினர் அது குறித்து எந்த புகாரும் யாரிடமும் தரவில்லை. இரண்டு நாட்களாக எப்படி புகார் அளிக்கலாம் என்னென்ன வார்த்தைகளை பயன்படுத்தலாம் என யோசித்து புகாரை உருவாக்கி கொடுத்திருக்கிறார்கள்.

நாங்க எடுத்துச் சொன்னது செந்தில்பாலாஜி அவர்களோ இல்லை அவர்களின் தம்பி அசோக் குமாருக்கும் இதில் தொடர்பு என நேரடியான சாட்சியங்கள் எதுவும் இல்லை. எல்லாருமே காவல்துறையினர்கிட்ட கொடுக்கப்பட்ட நீதிமன்றத்தில் அனுமதிக்கப்படாத, அனுமதிக்கப்படக் கூடாத ஒரு ஒப்புதல் வாக்குமூலம். அதில்தான் இவங்க பெயர் எல்லாம் எழுதி எடுத்துட்டு வந்திருக்காங்க.

**செந்தில் பாலாஜிக்கு தொடர்பு இல்லை!**

முழுக்க முழுக்க அரசியல் காரணங்களுக்காக செய்துள்ளரகள் என கூறினோம். அரசு தரப்புல என்ன சொன்னாங்கன்னா, திருநாவுக்கரசும், செந்தில்பாலாஜி அவர்களும் ஒரே நாள்ல ஈரோட்டுல இருந்திருக்காங்க. ஒரு இடத்துல இல்ல. இரண்டு பேரும் ஒரே நாளில் ஈரோட்டுல இருந்திருக்காங்க என்பது தான் அதை தவிர அவங்ககிட்ட எந்த சாட்சியமும் இல்ல.

**அரசைக் கவிழ்ப்பதாக பொய்யான புகார்!**

முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால், செந்தில் பாலாஜி குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது களங்கம் விளைவிக்கும் வகையில். நேற்று வரைக்கும் அரசுத் தரப்பில் இருந்து அரசைக் கவிழ்க்கும் எண்ணத்தோடு இது செய்யப்பட்டது அப்படின்னு சொல்லிக்கிட்டே வந்தாங்க. அப்படியே செய்திகளும் வெளியிட்டன. ஆனா சபாநாயகரை அனைத்து கட்சியும் இணைந்து தான் தேர்ந்தெடுத்தது. அப்படியே சபாநாயகருக்கு எதிரான தீர்மானத்துல வாக்களிப்பது என்பது *Automatic* ஆ *stopping the government* ஆகாது. அதனால் அரசை கவிழ்க்க முடியாது.

நாங்க சபாநாயகர் தேர்தல்ல ஆதரிச்சு ஒருமித்த கருத்தோடு தான் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்படி இருக்கும் போது அரசை கவிழ்க்கறதா சொல்வது எல்லாம் புகார்ல அவங்களே எழுதி கொண்டது. அந்த புகார்லயே வந்து அந்த திருநாவுக்கரசு அரசை கவிழ்க்கனும்னு எங்கேயும் சொன்னதாக தகவல் இல்லை.

ஆனால் காவல் துறையினரும், அரசு செய்திக்குறிப்புகளிலும் அரசை கவிழ்க்கும் என்ற வார்த்தையை சேர்த்து எழுதிக்கிட்டே வந்தாங்க. இதை நாங்க நேத்து *principle* செஷன்ஸ் கோர்ட்டில் எடுத்து வாதிட்ட உடனே இன்று செந்தில் பாலாஜி அவர்களுக்கும், அசோக்குமாருக்கும். ஜாமீன் மனுவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட *counter affidavit* இல் அரசை கவிழ்க்க வேண்டும் என்ற வார்த்தையை நீக்கி விட்டார்கள்.

**மொத்தமாய் நீர்த்துப்போன முதல் தகவல் அறிக்கை!**

அப்ப அந்த மொத்த முதல் தகவல் அறிக்கையுமே நீர்த்துப் போய். சொல்லப்பட்ட எந்த குற்றச்சா ட்டுக்கும் ஆதாரங்களே இல்லாம இருப்பதால் நீதிமன்றம் எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்துக் கொண்டு நிபந்தனை ஜாமீன் கொடுத்திருக்கிறார்கள்.

இவ்வாறு மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ தெரிவித்தார்.

### த.வெ.க.ஆட்சியில் திருவள்ளூர் அருகே

# தொடரும் கொள்ளைச் சம்பவங்கள்: சட்டம் ஒழுங்குக்குச் சவாலா?

## பாதுகாப்புக் கோரி அச்சத்தில் மக்கள்!

திருவள்ளூர், ஜூலை 10-

திருவள்ளூர் அருகே சிறுவானூர் ஊராட்சிக்குட்பட்ட ஜே.ஜே. கார்டன் புதிய குடியிருப்பு பகுதியில் கடந்த ஒரு வாரத்தில் அடுத்தடுத்து நான்கு வீடுகளில் பூட்டை உடைத்து பணம், தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவங்கள் அப்பகுதி மக்களிடையே கடும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன.

ஒரே பகுதியில் குறுகிய கால இடைவெளியில் தொடர்ச்சியாக நடந்துள்ள இந்தச் சம்பவங்கள், அப்பகுதியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து கேள்விகளை எழுப்பியுள்ளன.

சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் இந்தப் பகுதியில் பெரும்பாலானோர் தனியார் தொழிற்சாலைகளில் பணிபுரிகின்றனர். பலர் இரவு நேரப் பணிக்குச் செல்வதால், வீடுகளில் பெண்கள், முதியவர்கள் மற்றும் குழந்தைகள் மட்டும் இருக்கும் சூழல் நிலவுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இந்த நிலையில் தொடர்ந்து நடைபெறும் கொள்ளைச் சம்பவங்கள் அவர்களின் அச்சத்தை மேலும் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

நேற்று இரவு முனி ரத்தினம் என்பவரின் வீட்டின் பூட்டை உடைத்து ரூ.22 ஆயிரம் ரொக்கம் திருடப்பட்டதாகவும், சிவகுமார் என்பவரின் வீட்டில் கொள்ளை முயற்சி நடைபெற்றதாகவும் புகார் அளிக்கப்பட்டுள்ளது. தகவலறிந்த புல்லரம்பாக்கம் போலீசார் சம்பவ இடத்திற்குச் சென்று கைரேகை நிபுணர்கள் மற்றும் மோப்பநாய் உதவியுடன் தடயங்களைச் சேகரித்து விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கு முன்பு, அதே பகுதியில் ஆசிரியர் உதய குமாரியின் வீட்டில் ரூ.20 ஆயிரம் ரொக்கமும் வெள்ளிப் பொருட்களும், அருணகிரி என்பவரின் வீட்டில் 2 சவரன் தங்க நகைகளும் ரூ.40 ஆயிரம் ரொக்கமும் கொள்ளையடிக்கப்பட்டதாக ஏற்கனவே புகார்கள் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

ஒரே குடியிருப்பில் மீண்டும் மீண்டும் நடைபெறும் சம்பவங்கள் குற்றவாளிகள் குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவையை வலியுறுத்துகின்றன.

அப்பகுதி மக்கள் கூறுவதாவது, இரவு நேரங்களில் காவல்துறை ரோந்து அதிகரிக்கப்பட வேண்டும், புதிய குடியிருப்புகள் மற்றும் மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் நிரந்தர கண்காணிப்பு ஏற்படுத்தப்பட வேண்டும், முக்கியச் சாலைகள் மற்றும் தெருக்களில் கூடுதல் மின்விளக்குகள் மற்றும் கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கப்பட வேண்டும் என்பதாகும். குற்றவாளிகளை விரைந்து கைது செய்து, இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாத வகையில் உறுதியான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

சட்டம் ஒழுங்கைப் பேணுவது மற்றும் பொது மக்களின் உயிர், உடைமை பாதுகாப்பை உறுதி செய்வது அரசின் அடிப்படைப் பொறுப்பாகும். தொடர்ச்சியாக நடைபெறும் குற்றச் சம்பவங்கள் குறித்து காவல்துறை தீவிர விசாரணை மேற்கொண்டு, குற்றவாளிகளை விரைந்து கைது செய்வதோடு, பொதுமக்களிடம் பாதுகாப்பு நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் கண்காணிப்பு மற்றும் ரோந்து பணிகளை மேலும் வலுப்படுத்துவது அவசியம் என்ற கருத்து சமூக ஆர்வலர்கள் மற்றும் அப்பகுதி மக்களிடையே வலுத்து வருகிறது.

# தெளிதல்நன்று!



**அறுதிப்பெரும்பான்மையே இல்லாமல் அடுத்த கட்சிகளின்**
**இரவல் கால்களின் தயவில் ஆட்சியில் அமர்ந்து கொண்டு**

**அதிகார மிதப்பில் ஆட்சிக் கட்டில் தருகிற கதகதப்புச் சுகத்தில்**

**த.வெ.க.வினர் சூப்பர் ஸ்டார் ரஜினியை வலை தளங்களில் கொச்சையாகவும் பச்சையாகவும் தொடர்ச்சியாக விமர்சித்து வருகின்றனர்.**

**1991-ல் மிருகபலத்தில் ஆட்சியில் அமர்ந்த ஜெயலலிதா**
**அம்மையார் அன்று இதே**
**சூப்பர் ஸ்டாரை வம்புக்கு இழுத்து**

**அதன் பலனை 1996-ல் வாங்கிக் கட்டிக் கொண்ட வரலாற்றினை**

**த.வெ.க. பால்புட்டிகள் அறிந்து தெளிவது நல்லது...**

**என்னநாஞ்**
**சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

### சொத்துத் தகராறு: சமரச தீர்வு மையத்தில்

# அமைச்சர் மரியவில்சன் ஜூலை 13 அன்று ஆஜராக வேண்டும்!

## உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை,ஜூலை 10-

சொத்து தகராறில் சகோதரரை தாக்கிய வழக்கில், அமைச்சர் மரிய வில்சன் ஜூலை 13ம் தேதி நேரில் ஆஜராக சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு நிதி அமைச்சர் மரிய வில்சன், கடந்த 2022ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8 ஆம் தேதி புதுச்சேரி, எழில் நகரில் வசித்து வரும் அவரது சகோதரர் மரிய குலோத் வீட்டின் கதவை உடைத்து, உள்ளே புகுந்து, மரிய குலோத், அவரது மனைவி கரோலின் ஆகியோரை தாக்கிய வீடியோ காட்சிகள் வைரலாகின. சம்பவம் குறித்த புகாரின் பேரில் லாஸ்பேட்டை போலீசார் வழக்கு பதிவு செய்திருந்தனர்.

புதுச்சேரி முதலாவது குற்றவியல் நீதி மன்றத்தில் விசாரணையில் உள்ள இந்த வழக்கில், ஆஜராக உத்தரவிட்ட போதும், மரிய வில்சன் தொடர்ந்து ஆஜராகாமல் இருந்து வந்தார். இதனால் ஜூலை 10ஆம் தேதி கட்டாயமாக ஆஜராக மரிய வில்சனுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த வழக்கை ரத்து செய்யக் கோரியும், இன்று நீதிமன்றத்தில் நேரில் ஆஜராவதில் இருந்து விலக்களிக்கக் கோரியும் மரியவில்சன் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதி இளந்திரையன் முன் விசாரணைக்கு வந்த போது, மரிய வில்சனுக்கு எதிரான வழக்கை ரத்து செய்யக் கூடாது என புதுச்சேரி அரசு வழக்கறிஞர் ஜெயராணி ஆஜராகி கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

இதையடுத்து, உயர்நீதிமன்ற சமரச தீர்வு மையத்துக்கு வழக்கை அனுப்பி வைத்த நீதிபதி, ஜூலை 13ஆம் தேதி அமைச்சர் மரிய வில்சன், அவரது தந்தை மற்றும் சகோதரர், சகோதரரின் மனைவி ஆகியோரை சமரச தீர்வு மையத்தில் ஆஜராக உத்தரவிட்டார்.

### அரசு வழக்கறிஞர் நியமனத்திற்கு

# த.வெ.க. மாவட்ட செயலாளர் ரூ.20 லட்சம் வசூல்!

## கலெக்டர், எஸ்.பி.யிடம் புகார்!

தேனி, ஜூலை 10-

அரசு வழக்கறிஞர் நியமனத்தில் தேனி த.வெ.க. தெற்கு மாவட்டச் செயலாளர் லெப்ட் பாண்டி முறைகேட்டில் ஈடுபட்டதாக வழக்கறிஞர்கள் கலெக்டர் அலுவலகம், எஸ்.பி. அலுவலகத்தில் புகார் மனு அளித்தனர். ஐகோர்ட் மதுரை கிளையைச் சேர்ந்த வித்யாதரன் உள்ளிட்ட வழக்கறிஞர்கள் நேற்று தேனி கலெக்டர் வைத்திநாதன் மற்றும் போலீஸ் எஸ்பி பிரவீன் கவுதம் ஆகியோரை சந்தித்து புகார் மனு அளித்தனர்.

புகார் மனு குறித்து வழக்கறிஞர் வித்யாதரன் கூறுகையில், “தமிழ்நாடு முழுவதும் நீதிமன்றங்களில் அரசு வழக்கறிஞர்கள் நியமனத்தில் பண முறைகேடு நடப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. விழுப்புரம் மாவட்ட நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞர்களை நியமிக்க ரூ.30 லட்சம் முறைகேடு நடந்திருப்பதாக, தவெக கட்சியை சேர்ந்த பெண் வழக்கறிஞர் ஒருவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் லெப்ட் பாண்டி ரூ.20 லட்சம் பெற்றுக் கொண்டு அரசு வழக்கறிஞர்களை நியமிக்க பரிந்துரைத்துள்ளதாக சமூக வலைதளங்களில் தகவல் பரவி வருகிறது. அரசு வழக்கறிஞர்கள் நியமனத்தில் தகுதியை முன்னிறுத்தி நியமனம் நடைபெற வேண்டும். இதற்கான தேர்வினை சரியாக நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி இருக்கிறோம். தவெக அரசு, மாவட்டச் செய லாளர்கள் மூலம் முறை கேடாக பணம் பெற்றுக் கொண்டு பரிந்துரைத்துள்ள வழக்கறிஞர்களை நியமிக்க கூடாது. வழக்கறிஞர் நியமனத்தில் முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றார்.